**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**நான்காம் பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (WRITTEN EXAMINATION)**

**ஜூலை–ஆகஸ்ட் – 2022**
**P104 காப்பியங்களும் சங்க இலக்கியமும்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

## பிரிவு – 1

**ஒரு சொல் / ஒரு தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. சேக்கிழார் இயற்றிய காப்பியம் யாது?
2. மணிமேகலை எந்தச் சமயத்தைச் சார்ந்த காப்பியம்?
3. குகன் இராமனிடம் படைத்த பொருள்கள் யாவை?
4. திண்ணனாரின் பெற்றோர் யாவர்?
5. வில்லிபாரதத்தில் உள்ள பருவங்கள் எத்தனை?
6. பாஞ்சாலி சபதம் எத்தனை சருக்கங்களைக் கொண்டது?
7. வாணிதாசன் படைத்த நூல்கள் எத்தனை?
8. முச்சங்கங்கள் பற்றி விரிவாகக் கூறிய நூல் எது?
9. தோயன் மாறன் கொல்லனிடம் சென்று எதை இரப்பான்?
10. தந்தையின் கடமை எது என்று பொன்முடியார் கூறுகிறார்?
11. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தினை எழுதியவர் யார்?
12. முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் யாது?
13. செம்புலப் பெயல்நீர் போலக் கலந்தவை எவை?
14. மகளின் தங்கையாகத் தாய் எதனைக் கூறுகிறாள்?
15. ஒவ்வாக் கூட்டம் என்பது எத்திணையைக் குறிக்கும்?

## பிரிவு – 2

**எவையேனும் <u>ஐந்து</u> வினாக்களுக்கு <u>ஒரு பத்தி அளவில்</u> விடை தருக.** **(5x3=15)**

1. இரட்டைக் காப்பியங்கள் யாவை? அவ்வாறு வழங்குவது ஏன்?
2. பெரியபுராணம் உணர்த்தும் செய்தி யாது?
3. பாரதியார் – சிறுகுறிப்பு வரைக.
4. மாங்கனியைக் கண்ட அடலேறுவின் நிலையைக் கவியரசு கண்ணதாசன் எவ்வாறு குறிப்பிடுகிறார்?
5. புறப்பொருள் என்றால் என்ன?
6. புண்ணுமிழ் குருதி – விளக்குக
7. தேர் மணியின் நாக்கைத் தலைவன் இழுத்துக் கட்டுவது ஏன்? இதனைக் கூறும் இலக்கியம் எது?
8. இளமை தீர்திறம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## பிரிவு – 3

**<u>மூன்று பக்கக் கட்டுரை வடிவில்</u> விடை தருக.** **(3x15=45)**

1. (அ) குகன் இராமனைச் சந்தித்து எவ்வாறு பணிவிடை செய்தான் என்பதை விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) மகாபாரதம் கூறும் கிருட்டிணன் தூது பற்றி விளக்கி எழுதுக.

2. (அ) கண்ணதாசனின் மாங்கனி குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) பத்துப்பாட்டில் உள்ள ஆற்றுப்படை நூல்கள் குறித்து எழுதுக.

3. (அ) மருதத் திணையின் இயல்புகள் குறித்து கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) கைக்கிளை, பெருந்திணை குறித்து கட்டுரை வரைக.

❋❋❋